தூத்துக்குடியில் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை

*483 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட இருக்கிறதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திசையன்விளையில் தொழிற்பேட்டை

*484 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய பிரதேசமான திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் தொழிற்பேட்டை ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Tiruchirappalli Central Jail

*185 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there was an out break of Jaundice in Tiruchirappalli Central Jail about 6th September 1969?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. வை. சுவாமிநாதன் : இந்த நோயினால் எவ்வளவு பேர் இறந்தார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒருவரும் இறக்கவில்லை.

திரு. என். வரதராஜன் : சிறைச்சாலையில் இன்றைக்கு வைத்திய வசதி போதுமான அளவு இல்லாத காரணத்தினால்தான் இந்த நோய் பெரிய அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சிறைச்சாலையில் வைத்திய வசதியை அபிவிருத்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலையில் போதுமான வைத்திய வசதியைச் செய்து வருகிறார்கள். இப்போதும் உடனடி மருத்துவ வசதியை தந்திருக்கிறோம். இந்த நோய் சிறைச்சாலையில் மட்டும் அல்ல வெளியிலேயும் அதிகமாகக் காணப்பட்டது. சில சட்டமன்ற உறுப்பினர்கள் அதன் காரணமாக இறந்திருப்பதும் நமக்குத் தெரியும்.